# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# CC. No.1617/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பழனியப்பன் | த-பெ | ராமசாமி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 59/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆட்டோ ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.05.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 10.12.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் சூரக்குடி நான்கு ரோடு சாலையில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தேன். அப்போது அரசு பேருந்து ஒன்று காரைக்குடி - திருச்சி பேருந்து அதன் வழிதடத்தில் செல்லாமல் தவறான வழிதடத்தில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வேகமாக சென்று ஓரமாக சம்பவ சாலையில் நின்று கொண்டி நபர் ஒருவர் மீது மோதியது. சத்தம் கேட்டு அங்கு சென்று பார்த்தபோது அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அவர் யார் என்று கேட்டபோது நெற்புகப்பட்டியை சார்ந்த விஜயாவின் கணவர் ஆறுமுகம் என்று தெரியவந்தது. உடனே நாங்கள் காவல் நிலையம் சென்று தகவல் சொன்னோம். பின்னர் அவரை கானாடுகாத்தான் மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸில் அழைத்து சென்றார்கள். காயம்பட்டு இறந்து போன நபரை பார்த்து கொண்டிருந்த காரணத்தால் அரசு பேருந்தின் ஓட்டுநரை என்னால் பார்க்க முடியவில்லை. போலீசார் சம்பவ சமயத்தில் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விபரங்களை போலீசாரிடம் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

புகாரை யார் கொடுத்தது என்றால் நாங்கள் நிறைய பேர் கொடுத்தோம் நிறைய நபர்கள் வந்துவிட்டார்கள் யார் யார் என்று எனக்கு தெரியாது. என்னை போலீசார் எங்கு எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் அன்றைய தினமே எனது வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். சம்பவ சாலையானது நான்கு பேருந்துகள் செல்லக்கூடிய நான்கு வழி சாலை என்றால் சரிதான். பேருந்து செல்லவேண்டிய வழியில் லாரி ஒன்றும் மினி பஸ் மோதி அங்கு நின்று கொண்டிருந்த விபரம் தெரியுமா என்றால் மினி பஸ் நின்றது. பேருந்தின் வேகம் அதிக வேகம்

என்றும் சொல்லமுடியாது குறைந்த வேகம் என்றும் சொல்லமுடியாது எனவே கவிழ்ந்திருக்க முடியாது. இறந்த நபர் மேற்படி இடத்தில் எதற்காக நின்றார் என்றால் ஊருக்கு செல்வதற்காக நின்று கொண்டிருந்தார். குன்றக்குடி ரோட்டில் இருந்து டாடா எஸ் வாகனம் வந்து கொண்டிருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும் இறந்த நபர் தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.19 11:58:34 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.